**கவனிக்க.-** இந்த வர்த்தமானியின் பகுதி VI இல் *2018* ஆம் ஆண்டுக்குரிய குருநாகல் மாவட்ட நீதாசன வலயத்துக்குரிய யூரிமார் பெயர்ப்பட்டியல் ஒன்று சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகின்றது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2082 - 2018 ජූලි මස 26 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.07.26

*2082 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |

| | பக்கம் |
|---|---|
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்ட அறிவித்தல்கள் | 134 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 137 |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2018, ஒகத்து மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, ஒகத்து மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


133- B81433-353(2018/07)

# காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்ட அறிவித்தல்கள்

*இணைப்பு 9*

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தினை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

சபரகமுவ மாகாண சபையின் இரத்தினபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள எலபாத்த பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் ஆதிய சபுதந்திரிகே அனுருத்திகா தில்ருக் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உபபிரிவின் கீழ் அதி அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் 1996.06.20 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள ரத்/ப்ரா/34101 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான அளுகெட்டிய எனும் முகவரியில் வசிக்கும் கொளொம்புகம ஆச்சாரிகே ஞானசேன என்பவருக்கு கையளிக்கப்பட்டு இரத்தினபுரி மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் ஜயபூமி இ. சங். 14/1382 ஆம் இலக்கத்தின் கீழ் 1996.10.09 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத் தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 20.08.2018 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

### அட்டவணை

இரத்தினபுரி நிர்வாக மாவட்டத்தின் எலபாத்த பிரதேச செயலாளர் பிரிவின் நவதுன் கோரளே பள்ளே பற்றில் / கொட்டாமுல்ல கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த அளுகெட்டிய எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் இரத்தினபுரி நில அளவை அத்தியட்சகரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும் இரத்தினபுரி நில அளவை யாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு வெளிக்களத் தாளில் தயாரிக்கப்பட்ட வெளிக்களத் தாளில் தயாரிக்கப்பட்டு எப். வீ. பீ. 81 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் தயாரிக்கப்பட்டு இரேகை வரைதலில் காணித்துண்டு 145 ஒரு பகுதி ஆம் இலக்க காணித்துண்டெனக் காட்டப்பட்டதும் 00 ஏக்கர் 02 றூட் 13 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதும் எலபாத்த பிரதேச செயலாளரின் 1999.03.24 ஆந் திகதியிடப்பட்ட எபிராலே/50/2/774 அனுமதியின் பிரகாரம், அனுமதிபெற்ற நில அளவையாளர் கே. ஈ. சுமதிரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 110 ஆம் இலக்க வரைபடத் திற்கமைய காணித்துண்டு 02 எனக் காட்டப்பட்டுள்ளதும் 00 ஏக்கர் 00 றூட் 35.6 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ளதுமான கணாதொலவத்த எனப்படும் அரச காணித்துண்டு.

வடக்கில் : எப். வீ. பீ. 81 இல் காணித்துண்டு 75, மற்றும் இந்தப் பகுதி காணித்துண்டு இலக்க 01;
கிழக்கு : இந்தக் காணியின் ஒரு பகுதியான காணித்துண்டு 01 மற்றும் எப். வீ. பீ. 81 இல் காணித்துண்டு 85;
தெற்கில் : எப். வீ. பீ. 81 இல் காணித்துண்டு 85 மற்றும் இந்தப் பகுதி காணித்துண்டு இலக்க 03;
மேற்கில் : இந்தப் பகுதி காணித்துண்டு இலக்க 03 மற்றும் எப். வீ. பீ. 81 இல் காணித்துண்டு 146 மற்றும் 75.

எஸ். ஏ. தில்ருக்,
பிரதேச செயலாளர்/பிரதிக் காணி
ஆணையாளர் (மாகாணங்களுக்குட்பட)

எலபாத.
2018, மாச்சு 15.

7 - 720

---

*இணைப்பு 9*

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தினை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

வடமத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டம், ராஜாங்கனை பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் பிஹிலிஎலே கெதர சுனில் அபேகோன் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் உப பிரிவு 19(4) இன் கீழ் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் 2001.01.23 ஆந் திகதி அளிக்கப்பட்ட அளிப்பு இலக்கம் அநு/ராஜா/பி/5752 இன் சொந்தக்காரரான ராஜாங்கனை, வட்டார இலக்கம் 04 இல் வசிக்கும் மாவனான ஹேவா பியசேன ஜயசேகர என்பவருக்கு உரித்தாக்கப்பட்டுள்ளதும் அநுராதபுரம் மாவட்டப் பதிவாளர் காரியாலயத்தில் இலக்கம் 433/152 இன் கீழ் 2001.10.29 ஆந் திகதி பதிவு செய்யப் பட்டுள்ளதுமான கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டுக்கு சட்ட ரீதியான பின்னுரித்தாளராக ஒருவர் நியமிக்கப்பட்டிருக்காமை அல்லது உரிமைக்காரர் ஒருவர் உள்ள போதும் அவர் பின்னுரித்தாளராக நியமிக்கப்பட விருப்பமின்மை காரணமாக பின்னுரித்துக்காரர் ஒருவர் நியமிக்கப்படாதுள்ள போது குறித்த அளிப்பினை மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 104 இன் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதை இத்தால் அறியத் தருகிறேன். இது தொடர்பில் யாதேனும் எதிர்வு கூறல் இருப்பின் 2018.08.20 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அதனை அறியத்தரவும்.

### அட்டவணை

அநுராதபுரம் மாவட்டத்தில் ராஜாங்கனை பிரதேச செயலாளர் பிரிவு, எப்பாவல கோரளே, 445 கிராம அலுவலரின் பிரிவில் உள்ள வட்டார இலக்கம் 04 எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் தலைமை அதிபதி அவர்களால் தயாரிக்கப்பட்டு அவர் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ள 02 ஆம் இலக்க களத்தாளில் 439 ஆம் இலக்க இ. கி. வ. துண்டு பிரிக்கும் வரைபடத்தில் 167 ஆம் இலக்க காணித்துண்டு எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுமான 00 ஏக்கர் 01 றூட் 29 பேர்ச்சஸ் பரப்பளவுள்ளதும் மேட்டுக் காணி என அழைக்கப்படும் பின்வரும் எல்லைகளைக் கொண்டதுமான அரச காணித்துண்டு:-

வடக்கு : பாதை ஒதுக்கம்;

கிழக்கு : மேட்டுக்காணி இலக்கம் 166;

தெற்கு : நீர்ப்பாசன வாய்க்கால் ஒதுக்கம்;

மேற்கு : மேட்டுக்காணி இலக்கம் 168.

பீ. ஜீ. சுனில் அபேகோன்,
பிரதேச செயலாளர்,
இராஜாங்கனை.

2018, மே 15.

7-973/1

---

இணைப்பு 9

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தினை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

வடமத்திய மாகாணத்தின் அநுராதபுர மாவட்டத்தின் ராஜாங்கனைய பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் பிஹிலிஎலே கெதர சுனில் அபேகோன் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளை சட்டத்தின் 19 (4) உப பிரிவின் கீழ் அதியுத்தமராம் சனாதிபதி மூலம் 1996.04.10 ஆந் திகதி அன்பளிக்கப்பட்டுள்ள இலக்கம் அநு/ராஜா/பிர/3493 கொடையளிப்பு பத்திரத்தின் உரிமையாளரான ராஜாங்கனைய யாய 02, வசிக்கும் விதானகே மென்திரிஸிற்கு அன்பளிக்கப்பட்டு அநுராதபுர மாவட்டப் பதிவாளர் காரியாலயத்தில் இல. 7396 இன் கீழ் 1999.12.14 ஆந் திகதி பதிவு செய்யப்பட்ட அட்டவணையின் கீழ் காட்டப்பட்ட உப ஆவனத்தின் நிலத்திற்கு வாரிசாவதற்காக சட்டரீதியான உரிமையாளர் ஒருவர் இல்லாதிருப்பதால் அல்லது உரிமையாளர் ஒருவர் இருந்தும் அவர் வாரிசாக விரும்பாததால் வாரிசாவதற்கு ஒருவர் நியமிப்பதற்கு இல்லை என்று குறிக்கப்பட்டுள்ளது. வாரிசாக நியமிப்பதற்கு ஒருவர் இல்லை என்று பதிவாக்கப்பட்டுள்ளதால், அந்த வழங்கட் பத்திரம் குறித்த சட்டத்தின் 104 ஆவது தொகுப்பின் கீழ் இரத்து செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை இதனால் தெரிவித்துக் கொள்கிறேன். இது சம்பந்தமாக ஏதாவது ஆட்சேபனை இருந்தால்அதனை 2018.08.20 ஆந் திகதிக்கு முன் எனக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட வேண்டும்.

### அட்டவணை

வட மத்திய மாகாண, அநுராதபுர மாவட்டத்தின் ராஜாங்கனய பிரதேச செயலாளர் பிரிவின் எப்பாவல கோரலே 443 கிராம அலுவலர் பிரிவில் ரொட்டவெவ எனும் கிராமத்தில் அமைந் திருக்கும் நிலஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு அவர் பொறுப்பிலுள்ள இல. 03 எனும் புலம் தாளில் இல. அ. க. சி.அ. 434 கொண்ட திட்டத்தின் இல. 296 கொண்ட காணித்துண்டாக விளக்கப்பட்டுள்ள விஸ்தீரணத்தில் 01 (ஒரு) ஏக்கர் , 02 (இரண்டு) றூட் , 22 (இருபத்து இரண்டு) பேர்ச்சஸ் என்று கணக்குப்பார்க்கப்பட்ட சேற்று என்று அறிமுகப்படுத்தப்பட்ட கீழ் காட்டப்படும் வகையில் எல்லையாக்கப்பட்ட அரசாங்கக் காணித் துண்டு:-

வடக்கு : திம்பிரிவெவ கிராம எல்லை;

கிழக்கு : இல. 295, வயல் நிலம் ;

தெற்கு : இல. 313 வீணாக்கப்பட்ட கால்வாய் ஒதுக்கம் ;

மேற்கு : இல. 297 வயல்நிலம்.

பீ. ஜீ. சுனில் அபேகோன்,
பிரதேச செயலாளர்,
இராஜாங்கனை.

2018, பெப்புருவரி 28.

07-973/2

---

இணைப்பு 9

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தினை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

வடமத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டத்தில், அமைந்துள்ள பத்திய நுவரகம் பளாத்த பிரதேச செயலாளர் பிரிவின், உதவிப் பிரதேச செயலாளர்/ பிரிதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடைப்பட்ட) டபிள்யூ. எம். யூ. வீரசிங்க ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 2003.10.30 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள அநு/நுப/பிர/3343 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளர் பெரிமியன்குளம எனும் முகவரியில் வசிக்கும் விக்கிரமபேடிகே விமலாவதீ என்பவருக்கு கையளிக்கப்பட்டு, அநுராதபுர மாவட்டப் பதிவாளர், அலுவலகத்தில் 530/132 ஆம் இலக்கத்தின் கீழ் 2003.07.24 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்கு சட்ட ரீதியான

உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின் றேன். இதுதொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2018.08.20 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

அநுராதபுரம் நிர்வாக மாவட்டத்தின் மத்திய நுவரகம் பளாத்த பிரதேச செயலாளர் பிரிவின் நுவரகம் பற்றில்/கோறளையிலுள்ள இல. 300 பெரிமியன்குளம கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பெல்மடுல்லகம - பெரிமியன்குளம எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் சிரேஷ்ட நில அளவையாளர் அத்தியட்சகர் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு வெளிக்களத் தாளில் துண்டு பிரிக்கும் வரைபடத்தில் தயாரிக்கப்பட்டதும் 01 றூட் (ஒரு) விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித் துண்டு மேட்டு நிலம்.

வடக்கு : (உபாலி சிரிவர்தன வதிவிடம்) குறுக்கு வீதி;
கிழக்கு : பீ. டி. சாமெல் வதிவிடம்;
தெற்கு : காமினி கொடிப்பிலி வதிவிடம்;
மேற்கு : பெல்மடுல்லகம குறுக்கு வீதி.

டபிள்யூ. எம். யூ. வீரசிங்க,
உதவிப் பிரதேச செயலாளர்,
பிரதேச செயலாளருக்காக,
மத்திய நுவரகம்பலாத்த,
பண்டுலகம-அநுராதபுரம்.

2018, ஏப்பிறல் 18.

07-973/3

---

இணைப்பு 9

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தினை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

வடமத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டம், ராஜாங்கனை பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் பிஹிலி எலே கெதர சுனில் அபேகோன் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் உப பிரிவு 19(4) இன் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1995.08.21 ஆந் திகதி அளிக்கப்பட்ட அளிப்பு இலக்கம் அநு/ராஜா/பி/931 இன் சொந்தக்காரரான ராஜாங்கனை, வட்டார இலக்கம் 11 இல் வசிக்கும் வெலிவிட்டகே பிரேமதாச என்பவருக்கு உரித்தாக்கப்பட்டுள்ளதும் அநுராதபுரம் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் 3196 இன் கீழ் 1995.11.08 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ளதுமான கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டுக்கு சட்ட ரீதியான பின்னுரித்தாளராக ஒருவர் நியமிக்கப்பட்டிருக்காமை அல்லது உரிமைக்காரர் ஒருவர் உள்ள போதும் அவர் பின்னுரித்தாளராக நியமிக்கப்பட விருப்பமின்மை காரணமாக பின்னுரித்துக்காரர் ஒருவர் நியமிக்கப்படாதுள்ள போது குறித்த அளிப்பினை மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 104 இன் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதை இத்தால் அறியத் தருகிறேன். இது தொடர்பில் யாதேனும் எதிர்வு கூறல் இருப்பின் 2018.08.20 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அதனை அறியத்தரவும்.

**அட்டவணை**

அநுராதபுரம் மாவட்டத்தில் ராஜாங்கனை பிரதேச செயலாளர் பிரிவு, நுவரகம்பளாத்த கோரளே, இல. 453, கிராம அலுவலரின் பிரிவில் உள்ள வட்டார இலக்கம் 11 எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் தலைமை அதிபதி அவர்களால் தயாரிக்கப்பட்டு அவர் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ள 01 ஆம் இலக்க களத்தாளில் 16 ஆம் இலக்க இ. கொ. வ. துண்டு பிரிக்கும் வரைபடத்தில் 369 ஆம் இலக்க காணித்துண்டு எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுமான : 00 (இல்லை) ஏக்கர் ; 02 (இரண்டு) றூட்; 00 (இல்லை) பேர்ச்சஸ் பரப்பளவுள்ளதும் மேட்டுக் காணி என அழைக்கப்படும் பின்வரும் எல்லைகளைக் கொண்டதுமான அரச காணித்துண்டு:-

வடக்கு : பாதை ஒதுக்கம்;
கிழக்கு : மேட்டுக்காணி இலக்கம் 368;
தெற்கு : மேட்டுக்காணி இலக்கம் 392 மற்றும் 253;
மேற்கு : மேட்டுக்காணி இலக்கம் 370.

பீ. ஜீ. சுனில் அபேகோன்,
பிரதேச செயலாளர்,
இராஜாங்கனை.

2018, மே 08.

7-973/4

---

இணைப்பு 9

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தினை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

வடமத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டம், ராஜாங்கனை பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் பிஹிலி எலே

கெதர சுனில் அபேகோன் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் உப பிரிவு 19(4) இன் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதி அவர்களால் 1982.06.07 ஆந் திகதி அளிக்கப்பட்ட அளிப்பு இலக்கம் அனு/பி/1847 இன் சொந்தக்காரரான ராஜாங்கனை, தெற்கு வட்டார இலக்கம் 5 இல் வசிக்கும் துல்வலதேவகே ருவீதன் என்பவருக்கு உரித்தாக்கப்பட்டுள்ளதும் அனுராதபுரம் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் நு.ப.தெ/1/1889 இன் கீழ் 1982.06.07 ஆந் திகதி பதிவு செய்யப் பட்டுள்ளதுமான கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணித் துண்டுக்கு சட்ட ரீதியயான பின்னுரித்தாளராக ஒருவர் நியமிக்கப் பட்டிருக்காமை அல்லது உரிமைக்காரர் ஒருவர் உள்ள போதும் அவர் பின்னுரித்தாளராக நியமிக்கப்பட விருப்பமின்மை காரணமாக பின்னுரித்துக்காரர் ஒருவர் நியமிக்கப்படாதுள்ள போது குறித்த அளிப்பினை மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 104 இன் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதை இத்தால் அறியத் தருகிறேன். இது தொடர்பில் யாதேனும் எதிர்வு கூறல் இருப்பின் 2018.08.20 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அதனை அறியத்தரவும்.

**அட்டவணை**

வடமத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டம், ராஜாங்கனை பிரதேச செயலாளர் பிரிவு, எப்பாவல கோரளே, இல. 7ஏ, ராஜாங்கன கொலனி கிராம அலுவலரின் பிரிவில் உள்ள அங்கமுவ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் தலைமை அதிபதி அவர்களால் தயாரிக்கப்பட்டு அவர் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ள 04 ஆம் இலக்க களத்தாளில் 439 ஆம் இலக்க இ. கொ. வ. துண்டு பிரிக்கும் வரைபடத்தில் 422 ஆம் இலக்க காணித்துண்டு எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுமான 00 ஏக்கர், 02 றூட் (இரண்டு), 26 பேர்ச்சஸ் (இருபத்தாறு) பரப்பளவுள்ளதும் அங்கமுவ மூகலான என அழைக்கப்படும் பின்வரும் எல்லைகளைக் கொண்டதுமான அரச காணித்துண்டு.

வடக்கு : இலக்கம் 375 மயானம் ;
கிழக்கு : இலக்கம் 421 மற்றும் 433 இன் மேட்டுக்காணிகள்;
தெற்கு : இலக்கம் 431 மேட்டுக்காணி;
மேற்கு : இலக்கம் 423 பாதை மற்றும் 432 மேட்டுக்காணி.

பீ. ஜீ. சுனில் அபேகோன்,
பிரதேச செயலாளர்,
இராஜாங்கனை.

2018, ஏப்பிறல் 17.

7-973/5

## நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/20454.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : என்சீபீ/பீஎல்சீ/2006/5/10/4.

### முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அநுராதபுரம் மாவட்டம், நுவரகம்பலாத் கிழக்குபிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 255 கட்டம் III பகுதி I கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த அநுராதபுரம் கட்டம் III எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் அ. ந. பி. அ. 05 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 934 இன் ஒரு பகுதி எனக் காட்டப் பட்டுள்ளதும் 0.1012 ஹெக்டயர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்கு குத்தகைக்குத் தருமாறு கேட்டு திருமதி தொம்பகம்மன முதியன்சேலாகே அவர்கள் விண்ணப்பித் துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வரு மாறு:

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 562/106 $A^1$ ;
கிழக்கு : டி. எஸ். சேனாநாயக்க மாவத்தைக்கான ஒதுக்கு ;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 562/106 $A^3$;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 562/106 $A^4$.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக் கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (1995.06.15 ஆந் திகதி தொடக்கம் முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை.**- பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 1995 ஆம் வருடத்துக்கான வர்த்தகப் பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும். ஆயினும்; திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த ஐந்து வருடங்களின் இறுதியில் கொடுபட்ட தொகையிலும் பார்க்க 50 வீதத்திற்கு குறையாமல் இருத்தல் வேண்டும்;

தண்டப்பணம்.- காணியின் அபிவிருத்தி செய்யப்பட்ட பெறுமதியின் 4% தின் மும்மடங்கு தொகை தண்டப் பணமாக செலுத்தப்படல் வேண்டும்;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியி லிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர், இலங்கை முதலீட்டுச்சபை மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக் காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 1995.06.15 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங்கள் நிறைவு பெறும் வரையினும் இக்காணி குத்தகைக்குப் பெற்ற நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கைமாற்றம் அல்லது கீழ் குத்தகைக்கு விடுதல் அனுமதியளிக் கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானியில் பிரசுரித்த தினத்தில் இருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத் தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

புபுதி பிரேமதாச,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
''மிஹிகத மெதுர'',
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2018, யூலை 26.

7 - 966

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/20456.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : என்சீபீ/பீஎல்சீ/2006/5/10/4.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அநுராதபுரம் மாவட்டம், நுவரகம்பலாத்த கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 255 கட்டம் iii கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த அநுராதபுரம் கட்டம் iii எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் அ. ந. பி. அ. 05 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 934 இன் ஒரு பகுதி எனக் காட்டப் பட்டுள்ளதும் 0.1012 ஹெக்டயர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்கு குத்தகைக்கு தருமாறு கேட்டு திரு. ரணசிங்க ஆராச்சிகே உபாலி ரணசிங்க விண்ணப்பித் துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 562/106 $A^2$ ;
கிழக்கு : டி. எஸ். சேனாயக்க மாவத்தைக்கான ஒதுக்கு ;
தெற்கு : புகையிரத பாதைக்கான ஒதுக்கு ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 562/106 $A^2$.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (1995.06.15 ஆந் திகதி தொடக்கம் முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை**.- பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 1995 ஆம் ஆண்டுக்கான வர்த்தகப் பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும் ஆயினும்; திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த ஐந்து வருடங்களின் இறுதியில் கொடுபட்ட தொகையிலும் பார்க்க 50 வீதத்திற்கு குறையாமல் இருத்தல் வேண்டும்;

தண்டப்பணம்.- காணியின் அபிவிருத்தி செய்யப்பட்ட பெறுமதியின் 4% தின் மும்மடங்கு தொகை தண்டப்பணமாக செலுத்தப்படல் வேண்டும்;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியி லிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர், இலங்கை முதலீட்டுச்சபை மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக் காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட

காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 1995.06.15 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங்கள் நிறைவு பெறும் வரையினும் இக்காணி குத்தகைக்குப் பெற்ற நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கைமாற்றம் அல்லது கீழ்க் குத்தகைக்கு விடுதல் அனுமதியளிக்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானியில் பிரசுரித்த தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

புபுதி பிரேமதாச,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2018, யூலை 26.

7 - 967